**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | : | |
| **Miscellaneous** | : | **CC.No.889/2024** |
| **Preliminary Register** | : | |
| **Police Station** | : | **Kanathur PS** |
| | | |
| **Deposition of witness for** | : | **LW5/PW6** |
| | : | |
| **Name** | : | **Sakthivel** |
| | : | **S/o. Murugan** |
| | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.09.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

முதல் விசாரணை **:**

நான் பனையூரில் வசித்து வருகிறேன். நான் தண்ணீர் கேன் போடும் வேலை செய்து வருகிறேன். எனக்கு எதிரி ஜெயராமனை தெரியாது. இவ்வழக்கின் புகார்தாரர் சுகுணா சாட்சிகள் நாராயணன் சுயம்புலிங்கம் ஆறுமுகம் ஆகியோர்களை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. எனது ஊரை சேர்ந்த ஆறுமுகம் என்பவர் கானத்தூர் காவல் நிலையத்தில் கையெழுத்து செய்ய வேண்டும் என்று என்னை அழைத்துச் சென்றார். நான் கையொப்பம் செய்தேன். எதற்காக கையொப்பம் செய்தேன் என்று

எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக பாதிக்கப்பட்டு அரசு தரப்பில் அனுமதி கூறப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீஸ் விசாரணையின் போது கடந்த 7.12.2014 ஆம் தேதி மாலை 7 மணி அளவில் இவ்வழக்கின் புகார்தாரர் சுகுணா அவரது கடையில் இருந்த பொழுது எதிரி ஜெயராமன் தகாத வார்த்தைகள் பேசியதாகவும் தவறான முறையில் நடந்து கொள்ள முயற்சி செய்ததாகவும் அவரது கணவர் தடையாக இருந்தால் அவரை கொலை செய்து விடுவதாக கூறியதாகவும் இதனை சாட்சி ஆறுமுகம் என்னிடம் தெரிவித்ததாகவும் தனது போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது வழக்கில் பாதிக்கப்பட்ட சுகுணாவின் பெயர் களங்கம் ஏற்படக்கூடாது என்ற காரணத்திற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

**Sd/–M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்**